# පාලන වාර්තාව

# நிருவாக அறிக்கை

# Administrative Report

# 2012

## ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව

## குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம்

## Department of Immigration & Emigration


ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව
අංක 41, ආනන්ද රාජකරුණා මාවත
කොළඹ 10

**Department of Immigration and Emigration**
41, Ananda Rajakaruna Mawatha, Colombo 10, Sri Lanka

**குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம்,**
41, ஆனந்த ராஜகருணா மாவத்த, கொழும்பு, இலங்கை.

දුරකථන අංකය : +94 11 5329400

# දැක්ම

කලාපයේ ප්‍රමුඛතම ආගමන හා විගමන සේවාව බවට පත්වීම.

# நோக்கு

பிராந்தியத்தின் மிகச் சிறந்த குடிவரவுச் சேவையாக மாறுதல்

# Vision

To be the best immigration services in the region

# මෙහෙවර

ජාතික ආරක්ෂාව හා සමාජ හර පද්ධතිය සුරක්ෂිත කිරිම සහ ආර්ථික සංවර්ධනයට ඉඩ ප්‍රස්ථා සලසමින් රටින් බැහැරවන්නන් හා ඇතුළුවන්නන් නියාමනය කිරිම සහ පුරවැසි සේවා සැපයීම.

# பணி

தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக ஒழுங்கைப் பேனுவதுடன் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் ஆட்களின் வருகை மற்றும் வெளிச் செல்லலைக் கட்டுப்படுத்துதலும் பிரசாவுரிமை சேவைகளை வழங்குதலும்.

## Mission

We regulate the entry and exit of persons, and provide citizenship services, while safeguarding the nation's security & social order, and promoting economic development

# <u>அறிமுகம்</u>

இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த சட்டதிட்டங்கள் , ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் என்பவற்றின் அடிப்படையில் மட்டும் செயற்படுகின்ற நிலைமையிலிருந்து விட்டகன்று, திணைக்களத்திற்கான நெறியாக்க நடவடிக்கைகளை இன்றைய சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைத்து அதற்கான புத்தம் புதிய உபாய மார்க்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் மிகவும் பயனுள்ள அரச சேவையில் ஈடுபட 2012 ஆம் ஆண்டு இத்திணைகளத்திற்கு முடிந்துள்ளமையானது தனிச்சிறப்பான தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

இதன் பிரகாரம் இதுவரை காலமும் கடவுச்சீட்டு விநியோகத்தின் மீது மட்டும் செலுத்தப்பட்ட கூடிய கவனமானது ஏனைய நிருவாக நடவடிக்கைகள் ( Border Management) மீதும் செலுத்தப்பட்டது. பாதுகாப்புச் செயலாளரது வழிகாட்டுதலுக்கமைவாக இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்கள் வீசா பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதன் பொருட்டு இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த சுற்றுலாவுக்கான வீசா முறையை முற்றுமுழுதாக இரத்துச் செய்து, இணையத்தளத்தின் ஊடாக வீசா பெற்றுக்கொள்ளக்கூடிய வேகமானதும், நெகிழ்ச்சித் தனமையுடன் கூடியதும், இலகுவானதுமான முறையொன்றாகிய “ சுற்றுலாக்களுக்கான ஈ - முன்கூட்டிய வீசா அங்கீகாரம் (ETA)’’ இந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் இறுதிவரை இலங்கைக்கு வருகை தந்திருந்த ஒரு மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அனைவரும் மேற்படி முறையினூடாக இந்நாட்டுக்கு வருகை தந்திருந்தனர் என்பதுடன் இதனூடாக அரசாங்கம் பெற்ற வருமானமானது 2200 மில்லியன்களாகும். இந்த வருமானமானது அரசாங்கம் இதுவரைகாலமும் இழந்திருந்த தேறிய வெளிநாட்டு வருமானமொன்றாகும்.

இதேவேளை, நாட்டுக்குள் வெளிநாட்டவர்களும் இலங்கையர்களும் பிரவேசிக்கின்றபோதும் வெளியேறுகின்ற போதும் விமான நிலையத்தினூடாகவும் துறைமுகத்தினூடாகவும் நிறைவேற்றப்படுகின்ற சேவையானது இந்த வருடம் முன்னேற்றப்பட்டது. இதன்பொருட்டு இலங்கை உள்ளூர் நிருவாகத் தகவல்களை சர்வதேச பொலிசுடன் இணைத்தமை மிக முக்கியமானதும் தனிச்சிறப்பு வாய்ந்ததுமான பணியாக அமைந்தது. இலங்கையானது, மேற்கூறப்பட்டவாறு சர்வதேச பொலிசுடன் குடிவரவு குடியகல்வு தகவல்களை இணைத்து சேவைகளை வழங்குகின்ற முதலாவது தெற்காசிய வலய நாடாக அமைந்தது.

அம்பாந்தோட்டை மாகம் உறுகுனுபுர துறைமுகம் திறக்கப்பட்ட உடனடுத்து அத்துறைமுகத்தின் குடிவரவு குடியகல்வு நடவடிக்கைகளுக்கும் பங்களிப்பு வழங்க இத்திணைக்களத்திற்கு முடிந்தது.

மேலும் நாட்டினுள் வீசா ஒழுங்குவிதி முறைகளை மீறுகின்ற வெளிநாட்டவர்களை ஒழுங்குபடுத்துவதற்காக விசேட உளவு மற்றும் புலனாய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறப்பட்டவாறு ஒழுங்குவிதிமுறைகளை மீறிய 499 வெளிநாட்டவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றவும் இதன் காரணமாக முடிந்தது. அதேவேளை, வெளிநாட்டவர்களை தடுத்து வைப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட மிரிஹான தடுப்பு முகாமை நவீனமயப்படுத்த முடிந்ததுடன் நிரந்தரமான இடமாக மினுவாங்கொடை பிரதேசத்தில் தடுப்பு முகாமொன்றை அமைப்பதற்குப் பொருத்தமான காணியொன்றைப் பெற்றுக்கொள்ளவும் இந்த வருடம் முடிந்தது.

இத்திணைக்களத்திற்குச் சொந்தமான முதலாவது அரச உடமையாக வரலாற்றில் தடம் பதித்து வவுனியா பிராந்திய அலுவலகத்தைத் தாபித்தன் மூலம் 2012 ஆம் ஆண்டில் நாம் மற்றுமொரு அடியை முன்னெடுத்து வைத்துள்ளோம். இதன் மூலம் வட புலத்தின் மக்களுக்கு மிக இலகுவாகவும் துரிதமாகவும் சேவை வழங்குவதற்கான ஆற்றல் எமக்குக் கிடைத்ததுள்ளது.

புதிய அரச சேவையொன்றை உருவாக்குவதன் பொருட்டு தோல் கொடுக்கக்கூடியதாக அமைந்த திருப்புமுனை ஆண்டாகிய 2012 இல் இத்திணைக்களத்திற்குப் பல சர்வதேச விருதுகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆசிய பசுபிக் வலயத்தைச் சேர்ந்த 48 நாடுகளின் 99 கருத்திட்டங்களுக்கு மத்தியில் இலங்கையின் ETA கருத்திட்டமானது மிகச் சிறந்த கருத்திட்டமாக அமைந்து சர்வதேச Future Gov விருதினால் கௌரவிக்கப்பட்டமையானது 2012 ஆம் ஆண்டில் பெற்ற மிகப் பெரிய வெற்றியாகும். மேலும் இதே வருடம் சர்வதேச மெக்கேன் விருதினாலும், மிகச் சிறந்த ஈ - அரச சேவைக்கான ஸ்வாபிமானி விருதுகள் இரண்டினாலும், மனித உரிமைகள் பற்றிய விருதினாலும் கௌரவிக்கப்பட்டதுடன் அது இலங்கைக்குப் பெரும் அபிமானத்தையும் பெற்றுக்கொடுத்தது.

01. நிருவாகம்

**குடிவரவு , குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாடு மற்றும் கொள்கைப் பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேடப் பணிகள்.**

- **அநுராதபுரம் பிராந்திய அலுவலகம் வவுனியாவில் தாபிக்கப்பட்டமை.**

அரச சேவைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு எனும் கொள்கைக்கமைவாக 2006 ஆம் ஆண்டு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 3 பிராந்திய அலுவலகங்கள் மாத்தறை, கண்டி, அநுராதபுரம் ஆகிய நகரங்களில் தாபிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து சமாதானம் உருவானதன் பின்னர் வட கிழக்கு மக்களுக்கு மிகவும் நெருக்கமான சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்காக அநுராதபுரம் பிராந்திய அலுவலகமானது வவுனியா நகரத்தில் ஜே.சீ. 23, வெளிச் சுற்று வீதி, வவுனியா எனும் முகவரியில் தாபிக்கப்பட்டது. இந்த அலுவலகமானது பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எஸ். ஹெட்டிஆரச்சி அவர்களது தலைமையில் 2012.02.08 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா நகரத்தில் இந்த அலுவலகத்தைத் தாபிப்பதற்குப் பொருத்தமான கட்டிடமொன்றை கண்டுபிடிப்பதற்காக பாடுபட்ட சந்தர்ப்பத்தில் வவுனியா மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் திருமதி.பீ.எஸ்.எம். சாள்ஸ் அவர்கள் அரச கட்டடங்கள் இரண்டினை இத்திணைக்களத்திற்கு சட்டரீதியாக சாட்டினார். அவற்றுள் இலக்கம் ஜே.சீ. 23, வெளிச் சுற்று வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தை சுமார் 12 மில்லியன் ரூபா செலவிட்டு நவீனமயப்படுத்தி பிராந்திய அலுவலகம் தாபிக்கப்பட்டதுடன் இலக்கம் 13, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டிடம் உத்தியொகத்தர்களின் தங்குமிடமாகப் பயன்படுத்தப்பட்டது. இத்திணைக்களத்தின் தலைமையகம் உள்ளிட்ட சகல அலுவலகங்களும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்றன. வவுனியா மாவட்டச் செயலாளரினால் சாட்டப்பட்ட மேற்படி இரண்டு கட்டிடங்களும் இத்திணைக்களம் தாபிக்கப்பட்டு 63 வருடங்களுக்குப் பின்னர் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்தாக மாறியிருப்பது தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்வாகும்.

- **அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் சிரேஸ்ட அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் பதவிக்கு பதவி உயர்த்தப்படுதல்.**

இந்த ஆண்டில் 07 சிரேஸ்ட அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்கு அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர்கள் பின்வருமாறு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

| **திகதி** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2012.01.02 | 02 |
| 2012.01.17 | 01 |
| 2012.03.07 | 04 |

இலக்கம் 1733/52 மற்றும் 2011.11.25 ஆம் திகதிய அரச சேவைகள் ஆணைக் குழுவின் வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் திணைக்கள தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டதன் படி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தின் அடிப்படையில் இந்த பதவி உயர்வுகளை தாமதமின்றி மேற்கொள்ள முடிந்தது.

- **புதிய பதவிகளை உருவாக்குதல்**

I. திணைக்களத்தில் தற்போது நிலவுகின்ற சேவைத் தேவைகளுக்கேற்ப பணியாட்டொகுதியின் அமைப்பு மற்றும் சில பதவிகள் மாற்றியமைக்கப்பட்டன. இதன் பிரகாரம் திணைக்களத்தில் இதுவரை நிலவிய 35 கணனித் தரவு பதியுனர் பதவிகளை இல்லாதொழித்து கடவுச் சீட்டு உதவியாளர் பதவிகள் 35 புதிதாக 2012.07.01 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. இந்த 35 பதவிகளுக்காக தற்போது சேவையிலுள்ள கணனித் தரவு பதியுனர்கள் 35 பேரை உள்ளீர்ப்புச் செய்வதற்கும் அதன் பின்னர் ஏற்படுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் அதற்கு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

II. மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை துரிதமாக திறந்து வைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தவுடன் மேற்படி விமான நிலையத்தில் ஈடுபடுத்துவதற்காக அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தேவை எழுந்தது. அந்த சந்தர்ப்பத்தில் நிலவிய அதிகாரம் வாய்ந்த பதவிகள் 288 இதற்குப் போதுமானதாக அமையவில்லை. எனவே, புதிதாக அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் பதவிகள் 70 நி.பி.71 இன் கீழ் 2012.07.17 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டது. மேற்படி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்துவதற்குரிய வர்த்தமான அறிவித்தல் 2012.09.28 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது.

III. 2012.07.27 ஆம் திகதி இலங்கை க. சே.1/11 தரத்தின் பதவியொன்று நி.பி. 71 இன் கீழ் ஏற்படுத்தப்பட்டதுடன் அப் பதவியானது கணக்காளர் வருமானம் என பெயரிடவும்பட்டது. அப்போது திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக நிலவிய இலங்கை க. சே. 111 ஆம் தரத்திற்கான பதவி இலங்கை க. சே. 1 ஆம் தரத்திற்கான பதவியாக 2012.07.27 ஆம் திகதி உயர்தரமாக்கப்பட்டது.

## 2012. 12.31 ஆம் திகதியில் பணியாட்டொகுதி

| பதவி | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | இருக்கின்ற எண்ணிக்கை | வேற்றிடங்கள்/மிகை |
|---|---|---|---|---|
| கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.நி.சே.விசேட | 01 | 01 | - |
| கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே.1 | 05 | 05 | - |
| பிரதான கணக்காளர் | இ.க.சே.1 | 01 | 01 | - |
| பிரதி/உதவி கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே 11/111 | 40 | 35 | 05 |
| பிரதி கட்டுப்பாட்டாளர் | திணைக்கள ரீதியான | 02 | - | 02 |
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | திணைக்கள ரீதியான | 08 | 05 | 03 |
| கணக்காளர் | இ.க.சே.11 | 02 | 01 | 01 |
| உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே.1 | 01 | 01 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சுப்ரா தரம் | 02 | 02 | - |
| சிரேஸ்ட அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் | திணைக்கள ரீதியான | 30 | 28 | 02 |
| முறைமைப் பகுப்பாய்வாளர் | இ.த.தொ.மற்றும் தொ.சே | 01 | - | 01 |
| அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் | திணைக்கள ரீதியான | 358 | 279 | 79 |
| வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | அண்டிய சேவை | 01 | 01 | - |
| பயிற்சி முகாமையாளர் | அண்டிய சேவை | 01 | 01 | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | 368 | 301 | 67 |
| தரவு பதியுனர் | திணைக்கள ரீதியான | 36 | 31 | 05 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்கள ரீதியான | 02 | 01 | 01 |
| சாரதி | சாரதி சேவை | 29 | 22 | 07 |
| அலுவலக உதவியாளர் | அலுவலக உதவியாளர் | 104 | 90 | 14 |
| ஊக்குவிப்பாளர் | திணைக்கள ரீதியான | 03 | 03 | - |
| தோழிலாளி | ஒப்பந்த அடிப்டை | 02 | 02 | - |
| **மொத்தம்** | | **997** | **810** | **187** |

- **வாகனங்கள்**

2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் கடமைகள் விரிவாக்கம் அடைந்திருந்த அளவுக்கு ஏற்றவாறு வாகனங்கள் போதுமானதாக அமையவில்லை. இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக பொதுத் திறைசேரிலிருந்து குத்தகை முறை (லீசிங் முறை) அடிப்படையில் 06 வாகனங்கள் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டன.

- **ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்**

திணைக்களத்தில் நடைமுறையிலிருந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையானது தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்தப்பட்டது. இத்திருத்தத்திற்காக தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2012.09.05 ஆம் திகதியும், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினது பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2012.12.14 ஆம் திகதியும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

- **மிரிஹான தடுப்பு முகாமைப் புதுப்பித்தல்.**

திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவு மற்றும் விசேட புலனாய்வு மற்றும் உளவு ஒழுங்கமைவுப் பிரிவு என்பவற்றினால் நாடு முழுவதிலும் முற்றுகையிட்டு கைதுசெய்கின்ற சட்ட விரோதமாக நாட்டில் தங்கி நிற்கின்றதும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றதுமான வெளிநாட்டவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் வரை தடுத்து வைக்கப்படுவது மிரிஹான பொலிஸ் நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாமிலேயாகும். இத்தடுப்பு முகாமானது புதுப்பிக்க வேண்டிய ஒரு நிலையில் காணப்பட்டது. முகாம் அமைந்துள்ள காணியானது திணைக்களத்திற்குச் சொந்தமானதல்ல என்பதால் அங்கு புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதில் சிரமங்கள் உள்ளன. இதற்கு மாற்று நடவடிக்கையாக புலம்பெயர்வோர் பற்றிய சர்வதேச நிறுவனங்களுடன் கலந்துரையாடி அந்த நிறுவனத்தினுடைய அனுசரணையின் கீழ் 13 மில்லியன் ரூபாவைச் செலவிட்டு இந்த முகாம் நவீனமயமாக்கப்பட்டது. இருப்பினும் இத்திணைக்களத்திற்கே சொந்தமான முகாம் ஒன்றின் தேவை கடுமையாக உணரப்பட்டது.

- **மினுவாங்கொடை பிரதேசத்தில் புதிய முகாமொன்றை நிர்மாணித்தல்**

மேலே விபரிக்கப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையில் மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் கல்லேகெதர கிராம சேவகர் பிரிவில் மூடப்பட்டிருந்த கல்லேகெதர மகா வித்தியாலய காணியில் 100 பேச்சஸ் காணியை இத்திணைக்கத்திற்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மினுவாங்கொடை பிரதேச செயலாளரது உதவியுடன் இக்காணி அடையாளம் காணப்பட்டது.

அதன்படி இக்காணியை திணைக்களத்திற்கு சாட்டிக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்கு ஒருங்கமைவாக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான அடிப்படை திட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிரகாரம் காணியை அளவைசெய்து அடிப்படை திட்ட வரைபடம் நில அளவைத் திணைக்களத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் மண் பரிசோதனை நடவடிக்கைகள் புவிச் சுரங்கவியல் பணியகத்தினூடாக செய்துகொள்ளப்பட்டது. மண் பரிசோதனை பற்றிய அறிக்கையை 2012 ஆகஸ்ட் மாதம் பெற்றுக்கொள்ள முடிந்தது.

கட்டிட வரைவு நடவடிக்கைகள் பட்டய கட்டிடக் கலைஞர் ஒருவரைக்கொண்டு செய்துகொள்ளப்பட்டதுடன் அடிப்படை மதிப்பீடானது 200 மில்லியன் ரூபாவாகும். மேற்படி கட்டிட வரைவுகளுக்கும் மதிப்பீட்டுக்கும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் 2012.11.14 ஆம் திகதியளவில் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி இக்கட்டிடத்தை 02 கட்டங்களில் நிரமாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முதலாம் கட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டில் 50 மி. ரூபாவும் இரண்டாம் கட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டில் 150 மி.ரூபாவும் என்ற வகையில் இவ்விரு கட்டங்களும் நடைமுறைபடுத்தப்படும். இத்தடுப்பு முகாமானது பெண் மற்றும் ஆண் தடுப்புக் கைதிகள் 100 பேருக்கு தங்குமிட வசதிகளுடன் சர்வதேச தர நியமங்களுக்கேற்ப நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **<u>மக்கள் இல்லம்</u>**

கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுதல், கடவுச் சீட்டுக்களைத் திருத்துதல், வீசா பெற்றுக்கொள்ளுதல், பிரஜைகள் பிரிவின் கடமைகளை உள்ளிட்ட பல்தரப்பட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இத்திணைக்களத்திற்கு நாளொன்றுக்கு சுமார் 6000 பேர் வருகை தருகின்றனர். சேவைபெறுனர்களுடன் அவர்களுடைய உதவிக்காக வருகின்றவர்களுக்கு சேவைபெறுனர் சேவையைப் பெற்றுக்கொள்ளும் வரை தங்கி நிற்பதற்காக ‘‘மக்கள் இல்லம்’’ என்ற பெயரில் தலைமையகத்துடன் இணைந்ததாக அமைந்துள்ள மண்டபம் மொபிடெல் நிறுவனத்தினுடைய அனுசரணையின் கீழ் நவீனமயமாக்கப்பட்டது. இதன்கீழ் முழு மண்டபமும் மறுசீரமைக்கப்பட்டு, குளிரூட்டப்பட்டு உள்ளதுடன் தொலைக்காட்சிப் பெட்டிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இதற்காக மொபிடெல் நிறுவனம் மேற்கொண்ட செலவினம் 1.2 மி.ரூபாவாகும். நவீனமயமாக்கப்பட்ட இல்லமானது 2012.10.17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

## 1.2 <u>கொள்வனவுப் பிரிவு</u>

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு வருடாந்தம் தேவைப்படுகின்ற பொருட்களையும் சேவைகளையும் சரியாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அரசாங்கக் கொள்வனவுக் கோவை மற்றும் அதற்குரிய சட்ட திட்டங்களைப் பின்பற்றி கொள்வனவு செய்வதற்காக கொள்வனவுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவானது ஒரு உதவிக் கட்டுப்பாட்டாளரின் கீழ் அரச முகாமைத்துவச் சேவையைச் சேர்ந்த இரண்டு உத்தியோகத்தர்களையும் கொண்டமைந்து இயங்கி வருகின்றது. இப்பிரிவானது ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் அவ்வருடத்திற்கான கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றது. அந்த கொள்வனவுத் திட்டத்திற்கமைய பொருட்களும் சேவைகளும் கொள்வனவுச் செய்யப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பொருட்கள் | பொருட்களின் பெறுமதி ரூபா |
|---|---|---|
| 01 | அலுவலக உபகரணங்கள் | 1.516,809.86 |
| 02 | குளிரூட்டி இயந்திரங்கள் | 122,490.00 |
| 03 | அச்சு இயந்திரங்களும் தொலைநகல் இயந்திரங்களும் | 260,400.00 |
| 04 | கணனி முறைமைக்குரிய உபகரணங்கள் | 1,923,040.00 |
| 05 | வாகனங்கள் | 520,000.00 |
| | **மொத்தம்** | **4,342,739.86** |

**2012 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களுக்கு வருவதற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள்**

| | விபரம் | ஒப்பந்த விபரம் | | ஒருவருடத்திற்கு சேவைக் கட்டணம்(வரி இல்லாமல்) |
|---|---|---|---|---|
| | | ஆரம்பிக்கப்பட்ட திகதி | காலம் முடிவடையும் திகதி | |
| சேவை வழங்குனர் | சேவை ஒப்பந்தத்தின் பெயர் | | | |
| இன்டர்நெஷனல் கம்பியுடர் சிலோன் லிமிடேட் | மின்னஞ்சல், இணையத்தளம் மற்றும் வைரஸ் தீர்வுப் பராமரிப்பு | 01.07.2012 | 30.06.2013 | 1,095,000.00 |
| | சைபர் பயர்வோல் அனுமதிப்பத்திரக் கட்டணம் 2012 | | | 1,221,740.00 |
| ஐ.பீ.எம்..வேட் ட்றேட் கோபரேஷன் | வன்பொருள் பராமரிப்பு | 01.01.2012 | 31.12.2014 | 3,656,344.56 |
| ஈ.டபிள்யூ.இன்போமேஷன் சிஸ்டம் லிமிடேட் | கணனி 27 பராமரிப்பு | 20.01.2012 | 19.01.2013 | 359,741.25 |
| | கணனி 37 பராமரிப்பு | 01.01.2012 | 31.12.2012 | 565,826.25 |
| | கணனி 05 பராமரிப்பு | 23.02.2012 | 22.02.2013 | 55,800.00 |
| | அச்சு இயந்திர பராமரிப்பு | 16.12.2012 | 15.12.2013 | 190,680.00 |
| | பிரதேச அலுவலகங்களின் கணனிப் பராமரிப்பு | 04.10.2012 | 03.10.2013 | 372,000.00 |
| | கணனி 200 பராமரிப்பு | 17.12.2012 | 16.12.2013 | 1,493,800.00 |
| | கணனி 50 பராமரிப்பு | 22.01.2012 | 21.01.2013 | 373,450.00 |
| இன்போமெட்டிக் இன்டர்நெஷனல் பிரவேற் லிமிட்டேட் | மென் பொருள் பராமரிப்பு | 01.04.2012 | 31.03.2013 | 3,886,792.95 |
| | ஏ.பீ.சீ.யூ.பீ.எஸ்.ஹாட்வெயார் பராமரிப்பு | 01.05.2012 | 30.04.2013 | 890,450.00 |
| | | | | |
| | பிரதேச அலுவலகங்களில் ஏ.பீ.சீ.யூ.பீ.எஸ். பராமரிப்பு | 01.11.2012 | 31.10.2013 | 355,311.00 |
| | ஒக்கரல் மெட்லிங்க் உதவிச் சேவைகள் அனுமதிப்பத்திர கட்டணம் | 26.11.2012 | 25.11.2013 | 3,627,024.02 |
| | தொழிற்பாட்டு முகாமைத்துவ உதவிச் சேவைகள் | 14.08.2011 | 13.08.2012 | 8,400,000.00 |
| எபிக் லங்கா (பிரவேற்)லிமிடேட் | எப். ஏ. பீ. பராமரிப்பு | 01.04.2012 | 31.03.2013 | 8,282,273.12 |
| | விசுவர்லைசர் 03 பராமரிப்பு | 13.05.2012 | 12.05.2013 | 364,022.12 |
| | பிரதேச அலுவலகங்களில் எபிக் TPPSவசதிகள் பராமரிப்பு | 01.05.2012 | 30.04.2013 | 1,260,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிளைகளை விஸ்தரிப்பதற்கான கருத்திட்டங்களில் உள்ளூர் ரீதியாக கொள்வனவு செய்யப்பட்ட வன்பொருள்களைப் பராமரித்தல் | 01.07.2012 | 30.06.2013 | 1,076,788.00 |
| ஹைடெக் பாது பர்ஹாட் | அனர்த ஒதுக்கீடு வசதிச் சேவைகள் மற்றும் இரண்டாம் அலுவலகம் பராமரிப்பு | 19.08.2012 | 18.08.2013 | USD 117,815.00 |
| | அனர்த பயன்கள்,வசதிகள் இரண்டாம் அலுவலகத்திற்கான வரிகள் | 01.08.2007 | 01.02.2013 | 19,200,000.00 |
| | கிளைகளை விஸ்தரிப்பதற்கான கருத்திட்டங்களில் வெளிநாட்டு ரீதியாக கொள்வனவு செய்யப்பட்ட வன்பொருள்களைப் பராமரித்தல் | 01.07.2012 | 30.06.2013 | USD 123,156.56 |

## 1.3 <u>பயிற்சி மற்றும் அபிவிருத்தி அலகு</u>

குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அதற்கு உகந்தவாறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வது இப்பிரிவின் பிரதான பணியாகும். இதன் பொருட்டு தனியான ஒரு பயிற்சி அலகு தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அலகானது பயிற்சி முகாமையாளரொருவரின் தலைமையில் இயங்கியும் வருகின்றது. இப்பிரிவில் இரண்டு இலிகிதர்களும் அலுவலக உதவியாளரொருவரும் இணைக்கப்பட்டுள்ளதுடன் தேவையான ஆகக் குறைந்த அளவில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரிவினால் 2012 ஆம் ஆண்டு ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் அளவு கீழே தரப்பட்டுள்ளன.

| செயலமர்வு நடத்தப்பட்ட திகதி | செயலமர்வு | நடத்தப்பட்டது யாருக்காக/திணைக்களம் |
|---|---|---|
| 2012.01.26 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுச் சங்க பதிவாளர்கள் |
| 2012.02.23 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு | வெளிநட்டலுவல்கள் அமைச்சு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் |
| 2012.03.02,5,6,8,9 | சேவை ஆரம்ப பயிற்சிப் பட்டறை | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.03.12 | தொடர்பாடல் ஊடகம் | கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் 13 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்கள் |
| 2012.03.17 | "நெனெச அசிரிய"செயலமர்வு | இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.05.15, 18,22,23,24 | **நல்லாட்சி** | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.06.06 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு | இ.நி.சே111 ஆம் தர உத்தியோகத்தரகள் |
| 2012.06.13 | **நல்லாட்சி** | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.06.26, 27 | ETA முறையியல் | இ.நி.சே 2011/2012 இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.07.26 | ETA முறையியல் | இ.நி.சே 111 ஆம் தர உத்தியோகத்தரகள் |
| 2012.08.09 | குடிவரவு, குடியகல்வு புலனாய்வுச் செயன்முறை | இலங்கை கடற்படையின் உளவுசார் நடவடிக்கை உத்தியோகத்தர்கள் |
| 2012.08.15 | ETA முறையியல் | இ.நி.சே 2011/2012 இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.08.02 | சர்வதேச தொடர்புகள் அலகின் நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்பூட்டும் செயலமர்வு | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.08.21 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு | இ.நி.சே 111 ஆம் தர உத்தியோகத்தரகள் |
| 2012.09.10 | தனிச்சிறந்த பாவனையாளர் நற்பணி | 2011/2012 இடமாற்றம் பெற்றுவந்த சகல உத்தியோகத்தர்களும் |
| 2012.09.11 ,13,18 | புலம்பெயர் முகாமைத்துவம் | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.09.21 | ILO செயலமர்வு | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |

| | | |
|---|---|---|
| 2012.10.06 | வெற்றிபெறவே நான் பிறந்துள்ளளேன் | திணைக்கள உத்தியொகத்தர்களின் குடும்பத்தோர். |
| 2012.10.23 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு | பட்டதாரி பயிலுநர்கள் சார்பாக |
| 2012.11.07 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு | பட்டதாரி பயிலுநர்கள் சார்பாக |
| 2012.12.08 | சேவை நிலைய பயிற்சிப் பாடநெறி | சாரதிகளுக்காக |
| 2012.12.10 | வினைத்திறன்கான் பரீட்சை | அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் |
| 2012.12.21 | சர்வதேச ஒத்துழைப்புப் பிரிவின் தொழிற்பாட்டுச் செயன்முறை | இலங்கை கடற்படையின் உளவுசார் நடவடிக்கை உத்தியோகத்தர்கள் |

## 1.4 <u>சட்டப்பிரிவு</u>

திணைக்களத்தின் சட்டப்பிரிவானது 2012 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றியுள்ளது.

I. திணைக்களத்தினையும் தனிப்பட்ட முறையில் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினையும் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள இரண்டு உயர்நீதிமன்ற மனுக்கள் தொடர்பாக தேவையான அவதானிப்புக்களைத் தயாரித்தல் மற்றும் தேவையான ஆவணங்களை நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தவதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டுள்ளது.

II. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அல்லது சட்டத்தை நடைமுறைபடுத்தும் வேறு நிறுவனங்களால் குடிவரவு , குடியகல்வுச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுத்துள்ள சந்தர்ப்பங்களிலும் உரிய வழக்குகளில் குடிவரவு , குடியகல்வுக் கட்டப்பாட்டாளர் நாயகம் சாட்சியாளராகப் பெயரிடப்பட்டுள்ள வேளைகளிலும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து, திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்து 229 சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் சாட்சி முன்வைக்கப்பட்டுள்ளன.

III. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் தொடர்பாக 3 சந்தர்ப்பங்களில் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்து வெற்றிகரமாக விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

IV. சிவில் வழக்குகளின் போது திணைக்களம் சாட்சியாளராகப் பெயரிடப்பட்டிருந்த 4 சந்தர்ப்பங்களில் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்து சாட்சியளிக்கப்பட்டுள்ளன.

## 02. <u>நிதிப்பிரிவு</u>

வருமானம் ஈட்டுகின்ற முன்னணித் திணைக்ககளமொன்றாகிய குடிவரவு , குடியகல்வுத் திணைக்களத்தின் வருமானம்,செலவினம் பற்றிய முகாமைத்துவம், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை குறித்த வரையறைகளுக்குள் பேணிவருதல், திறைசேரி நியமங்களுக்கேற்ப நிதி நடவடிக்கைகளை நெறியாக்கம் செய்தல் மற்றும் வருடாந்த இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுதல் பிரதான கணக்காளரொருவரதும் இரண்டு உதவி கணக்காளர்களதும் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுகின்றது. நிருவாக உத்தியொகத்தர் (நிதி) மற்றும் முகாமைத்துவ உதவிச் சேவையின் 55 உத்தியொகத்தர்கள் என்போரைக் கொண்டமைந்த பணியாட்டொகுதியொன்று

கணக்குப் பிரிவு/சரப் பிரிவு மற்றும் களஞ்சியப் பிரிவு என்பற்றுக்குரியதாக கடமையாற்றுகின்றது. திணைக்களத்தின் சாதாரண வருடாந்த செலவின மதிப்பீடு சுமார் 1000 மி.ரூபா என்பதோடு 2012 ஆம் ஆண்டு இது 695 மில்லியன் ரூபாவாக அமைந்தது.

இத்திணைக்களமானது புதிய கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல், வீசா விநியோகித்தல், சுற்றுலாவுக்கான மின்னியல் அங்கீகார கருத்திட்டம் மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழ்களை விநியோகித்தல் என்பவற்றின் ஊடாக வருடாந்தம் கணிசமான வருமானத்தை திரட்டிய நிதியத்திற்கு வரவு வைக்கின்றது. 2011 ஆம் ஆண்டு வருமானமானது 3764 மில்லின் ரூபாவாக அமைந்ததோடு 2012.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைபடுத்தப்பட்ட இயைத்தளத்தினூடாக குறுகிய கால வீசா விநியோகிக்கும் கருத்திட்டத்தின் காரணமாக 2012 ஆம் ஆண்டு திணைக்களத்தின் வருமானமானது 6181 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

குறுகிய கால சுற்றுலாவுக்கான முன்கூட்டிய மின்னியல் அங்கீகார கருத்திட்டமானது 2012 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதோடு அதன் மூலம் 2000 மி.ரூபா வருமானம் மதிப்பிடப்பட்டது. இருப்பினும் 2012 ஆம் ஆண்டில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் 2200 மி.ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் சுமார் 35% ஆகும்.

2012 ஆம் ஆண்டு ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தில் 52% வீதம் புதிய கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல், புதுப்பித்தல் மற்றும் திருத்துதல் மூலமாகவும் வருமானத்தில் 11% வீசா விநியோகத்தின் மூலமாகவும் ஈட்டப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்குரியதாக, கருத்திட்டம் ஒன்று மற்றும் இரண்டு என்பவற்றின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள மதிப்பீட்டு ஒதுக்கீடுகள், உண்மையான செலவுகள் மற்றும் நிதி முன்னேற்றம் காட்டப்படும் அறிக்கைகள், 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மொத்த வருமானம் உள்ளடங்கிய அறிக்கைகள் அரச நிதி சுற்றறிக்கை 402 மற்றும் 2002.09.12 இல் 2.4 இன்படி இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. ( இணைப்புகள் 01,02,03,04 பார்க்க)

## 03 <u>தகவல் தொழில்நுட்பம்</u>

### கடந்த வருடம் இத்துறையின் மூலம் இடம்பெற்ற பிரதான பணிகள்

I. இருக்கின்ற கணனி முறைமையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகவும் சர்வதேச மட்டத்திற்கு மாற்றியமைப்பதற்காகவும் 11G சேவை நிலைக்கு முன்னேற்றுதல்.

II. கப்பற் பணியாட்டொகுதியின் தரையிறங்கும் அனுமதிப்பத்திரம் அதாவது உரிய கப்பல் இலங்கைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு இருக்கும் போது அதன் பணியாட்டொகுதியினருக்கு தரைக்கு வருவதற்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தை அச்சிடுவதற்காக மென்பொருள் நவீனமயப்படுத்துதல். இதற்கு முன்னர் இந்த அனுமதிப் பத்திரம் கையால் எழுதப்பட்டதுடன் அவர்கள் பற்றிய எந்தத் தகவல்களும் முறைமையில் உள்ளடக்கப்படவில்லை.

III. இலத்திரனியல் தரவுப் பலகைகளைப் (Dash Borad) பொருத்துதல். இதன் மூலம் கடவுச் சீட்டு தயாரிப்பதற்கான செயற்பாட்டுக்காக எடுக்கப்படும் நேரம் தொடர்பாக மேற்பார்வை செய்யப்படும். கடவுச் சீட்டுக்கான விண்ணப்பப்படிவம் கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அது விநியோகிகப்படும் வரை அந்தந்த கட்டங்களுக்காக துல்லியமான காலப்பகதியை ஒதுக்குவதன் மூலம் கடவுச் சீட்டு விநியோகத்தைத் துரிதப்படுத்துவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

IV. பிரஜைகள் பிரிவில் 2000.∵2007 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிநாடுகளில் இடம்பெற்ற இலங்கையர்களின் பிள்ளைப் பேறுகள் பிரஜைகள் சட்டத்தின் 5(2) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இதுவரை அத்தகவல்கள் கணனி முறைமையினுள் உள்வாங்கப்படவில்லை. தற்போது இத்தகவல்கள் முறைமையில் உள்ளடக்கப்படுவதனால் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றை இலகுவாகவும் துரிதமாவும் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

V. மின்னியல் சுற்றுலா முறைமையின் மூலம் இலங்கையில் தரையிறங்க அனுமதிபெற்ற வெளிநாட்டவர்களின் கடவுச் சீட்டுகளில் ஒட்டுவதற்காக மின்னியல் ஸ்ரிக்கர் ஒன்று உள்ளூர் முறைமையின் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல். இதற்கு முன்னர் இப்பணியானது இலச்சினை பொறிப்பதன் மூலம் இடம்பெற்றது. அது முறைசாரற்றதனால் இவ்வாறு மின்னியல் ஸ்ரிக்கர் பயன்படுத்தப்படுவது ஆரம்பிக்கப்பட்டது.

VI. மனிதவள முகாமைத்துவ மொடியுள் முன்னேற்றப்பட்டது.

VII. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு முறைமை வழியொன்றை திறந்து கொடுத்ததன் மூலம் அங்கு பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

VIII. மத்தல சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு , குடியகல்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரிக்கும் பூர்வாங்க நடவடிக்கைகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

## 04. <u>வீசா மற்றும் உள்ளூர் கட்டுப்பாட்டுப் பிரிவு</u>

- **வீசா**

இந்த வருடத்தில் தேசிய பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு வீசா விநியோகிக்கப்படுதல் மற்றும் நீடிக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டதோடு அதன்படி வெளிநாட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வீசாக்களை முடிவுறுத்துதல், இரத்துச்செய்தல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை தேசிய பாதுகாப்புக்கும் இலங்கையர்களுக்கும் இடையூறான மற்றும் பிரச்சினைகளைக் கொண்ட வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருவதை தடுப்பதற்காக அவர்கள் பற்றிய தகவல்களை கறுப்புப் பட்டியலில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- **வதிவிட வீசா**

பல்தரப்பட்ட குறிக்கோள்களுக்காகவும் நோக்கங்களுக்காவும் இலங்கையில் நீண்ட காலமாக தங்கி நிற்கின்ற வெளிநாட்டவர்களுக்கு விநியோகிக்கப்படும் இந்த வீசாவானது பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விநியோகிக்கப்படுகின்றது. தொழில் புரிவோர், முதலீட்டாளர்கள் , மாணவர்கள், பதிவு செய்யப்பட்ட இந்தியர்கள், இலங்கை பிரஜாவுரிமை இரத்துச் செய்யப்பட்டவர்கள், இலங்கைப் பிரஜையின் குடும்ப அங்கத்தவர்கள், இராஜதந்திரிகள் வதிவிட விருந்தினர் வீசா திட்டத்திலும் எனது கனவு வீடு எனும் வீசா திட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு வதிவிட வீசா விநியோகிக்கப்படுகின்றது.

- **விருந்தினர் வீசா**

வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுக் குழுக்களினால் வீசாக்களைப் பெற்று வருகின்றவர்களும், நாட்டுக்கு இலத்திரனியல் சுற்றுலா அனுமதியைப் பயன்படுத்தி வருகின்ற வெளிநாட்டவர்களும் ஒருமாதம் கடந்து தங்கி நிற்பதற்காகப் பெற்றுக்கொள்ளும் வீசாவாக இது கருதப்படுகின்றது. இதன்படி வருகை தந்த வெளிநாட்டவர்களுள் கணிசமான எண்ணிக்கையானோர் 03 மாதங்கள் வரை விருந்தினர் வீசா நீடிப்பினைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

### <u>குறுகியகால சுற்றுலாவுக்கான முன்கூட்டிய இலத்திரனியல் அனுமதி (Electronic Travel Authorization.)</u>

இலங்கைக்கு வருகை தருகின்ற மற்றும் இலங்கையின் ஊடாக பயணிக்கின்ற வெளிநாட்டவர்களுக்காக இணையத்தளத்தினூடாக வீசா விநியோகிக்கும் முறையின் பொருட்டு மின்னியல் சுற்றுலா அனுமதியை (Electronic Travel Authorization.) (ETA) நடைமுறைபடுத்துவதற்காக அமை/11/1100/503/062 மற்றும் 2011.01.25 ஆம் திகதிய அமைச்சரவை நிருபத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டு 2012.01.01 ஆம் திகதி மேற்படி முறை தாபிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் ETA இன் கீழ் கிடைக்கப்பட வேண்டிய அரச வருமானம் 2000 மி.ரூபாவென மதிப்பீடு செய்யப்பட்டதோடு 2012.12.31 ஆம் திகதியில் அது 2200 மி.ரூபாவாக மதிப்பீட்டு வருமானத்தை விஞ்சி அதிகரிப்பு காட்டியுள்ளது.
இந்த முறையியல் நடைமுறைபடுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இது இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையில் ஒரு குறைவினை ஏற்படுத்தலாமென எதிர்ப்புகள் கிளப்பப்பட்டாலும் வெளிநாட்டவர்களின் வருகையின் விகிதாசாரம் 2011 ஆண்டுடன் ஒப்பிடும்கால் 2012 ஆம் ஆண்டினுள் அது அதிகரித்திருப்பதன் காரணமாக மேற்படி வாதம் முறியடிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கின்ற பொருளாதார நன்மைகளைக் கருத்திற்கொண்டு 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளின் ஊடாக ETA கட்டணமானது 5 அமெரிக்க டொலர்களால் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டு 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- <u>பாதைகளுக்கிடையிலான வீசா</u>

இது பயணிகள் இலங்கையின் ஊடாக வேறு நாட்டுக்குப் பயணம் செய்வதற்காக பெற்றுக் கொள்ளும் வீசா என்பதோடு முதல் 48 மணித்தியாலங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. இதனை 07 நாட்கள் வரை உரிய கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். 2012 ஆம் ஆண்டு 44808 பேருக்கு பாதைகளுக்கிடையிலான வீசா விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்துனீசிய ,பிலிப்பீன் மற்றும் இந்திய இனத்தவர்கள் இந்த வீசாவை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

- <u>வதிவிட விருந்தினர் வீசா</u>

வதிவிட விருந்தினர் வீசாவானது நீண்ட கால வசிப்பு வீசாவாகக் கருதப்படுவதுடன், வெளிநாட்டு முதலீடுகளை பெருக்கிக்கொள்ளுதல், புத்திஜீவி தொழில்வாண்மையாளர்களை இந்த நாட்டுக்கு வரவழைத்துக்கொள்ளுதல் போன்ற பணிகளுக்காக இந்த வீசாக்கள் விநியோகிக்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு இந்த வீசா விநியோகங்கள் 11 உம் நீடிப்புகள் 31 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- <u>எனது கனவு வீடு வீசாத் திட்டம்</u>

எனது கனவு வீடு வீசாத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு தமது வாழ்கையின் அந்திப் பருவத்தை ஓய்வாகக் கழிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 55 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வெளிநாட்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாமென்பதுடன் அவர்களுடைய பெயரில் 15000/- அ.டொலர்களிலான நிலையான வைப்பினைப் பேணிச்செல்ல வேண்டும். மாதமொன்றுக்கு 15000/- அ.டொலர்களிலான தொகை இலங்கைக்கு அனுப்பப்படுதல் வேண்டும். 2012 ஆம் ஆண்டில் இந்த வீசா விநியோகங்கள் 41 உம் நீடிப்புகள் 95 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### <u>வதிவிடவீசா விநியோகிக்கப்படுதல் மற்றும் நீடிக்கப்படுதல்- 2012.12.31</u>.

| தொடர் இலக்கம் | தொகுதி | மொத்தம் |
|---|---|---|
| 01 | பிரஜைகள் சட்டத்தின் ii கீழ் வீசாக்களிலிருந்து விடுவிக்கப்படுதல் | 344 |
| 02 | ஏனைய | 02 |
| 03 | இரட்டை பிரஜாவுரிமை | 659 |
| 04 | பிரஜைகள் சட்டத்தின் 5 2 இன் கீழ் | 1276 |
| 05 | தனியார் துறைக்காக | 3995 |
| 06 | இலங்கையர் ஒருவரின் வெளிநாட்டு வாழ்க்கைத் துணைக்காக | 4674 |
| 07 | பதிவுசெய்யப்பட்ட இந்தியர்கள் | 65 |
| 08 | கடமை | 1442 |
| 09 | முன்னாள் இலங்கையர்களுக்காக | 3545 |
| 10 | மாணவர்கள் மற்றும் புலமைப் பரிசில்கள் | 5612 |

| | | |
|---|---|---|
| | பெற்றவர்களுக்காக | |
| 11 | மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் | 351 |
| 12 | வதிவிட விருந்தினர் வீசா | 44 |
| 13 | முதலீட்டுச் சபைகள் | 6289 |
| 14 | சமய நடவடிக்கைகள் | 995 |
| 15 | அரச துறைக்காக | 7978 |
| 16 | மதகுருமார்களுக்காக | 1188 |
| 17 | இலங்கையர்களின் பிள்ளைகளுக்காக | 341 |
| 18 | இராஜதந்திர ரீதியான | 538 |
| 19 | அரச சார்பற்ற அமைப்புகள் | 685 |
| 20 | எனது கனவு வீட்டுக் கருத்திட்டம் | 141 |
| 21 | நீதிமன்றில் ஆஜராவதற்கு | 145 |
| | **மொத்தம்** | **40309** |

## 4.1 இறங்குதுறை நடவடிக்கைகள்

**I.** 2012 யூன் 06 ஆம் திகதி மாகம் உறுகுனுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் குடிவரவு , குடியகல்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை துறைமுக அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் திணைக்களமானது தலைமையகத்துடன் இணைந்த கணனி முறைமையொன்றையும் முழுமையான அலுவலக உபகரணங்களையும் கொண்டமைந்த அலுவலகமொன்றை நிர்மாணித்தது. இந்த அலுவலகமானது 2012.08.17 ஆம் திகதி வெகுவிமரிசியாக திறந்து வைக்கப்பட்டது. இதில் கடமையில் ஈடுபட்டுள்ள சிரேஸ்ட அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் மற்றும் அதிகாரம் வாய்ந்த உத்தியேகத்தர்கள் என்போருக்காக மாகம் உறுகுனுபுர நிர்வாகக் கட்டிடத் தொகுதியில் உத்தியோகபூர்வ இல்லமொன்றும் ஒதுக்கப்பட்டது. 2012. 11. 09 ஆம் திகதி தொடக்கம் கப்பலோட்டிகளுக்கான கணனிமயமாக்கப்பட்ட தரையிறங்கும் அனுமதிப் பத்திரம் கொழும்புத் துறைமுகம் மற்றும் காலித் துறைமுகம் என்பவற்றை மையமாகக் கொண்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**II.** 2012.11.09 ஆம் திகதி தொடக்கம் கப்பலோட்டிகளுக்கான கணனிமயமாக்கப்பட்ட தரையிறங்கும் அனுமதிப் பத்திரம் கொழும்புத் துறைமுகம் மற்றும் காலித் துறைமுகம் என்பவற்றை மையமாகக் கொண்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**III.** விமான நிலையத்தினூடாக வருகைதரும்போதும், வெளியேறும்போதும் திணைக்களமானது ஆரம்பத்திலிருந்து உள்நாட்டு /வெளிநாட்டுப் பயணிகளின் கடவுச் சீட்டுகளில் அவர்களுடைய வருகையை இலச்சினையொன்றின் மூலமாகவே புறக்குறிப்பிட்டது. இதற்கு மேலதிகமாக 2012.07.01 ஆம் திகதி தொடக்கம் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்றவாறு ஸ்ரிக்கர் ஒன்றை புறக்குறிப்புக்கு ஒருங்கமைவாக இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**IV.** சர்வதேச தொழில் அமைப்பின் அனுசரணையோடு சர்வதேச கற்கைகள் பற்றிய பண்டாரநாயக்க நிலையத்தினால் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஸ்ட அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கும் , அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கும் புலம்பெயர் கற்கை பற்றிய டிப்ளோமாப் பாடநெறியொன்று இந்த வருடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு 21 உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் 100 பேருக்கு இலங்கையிலிருந்து வெளிநாடு சென்றுள்ள ஊழியர்கள் பற்றிய கொள்கைகள், நிபந்தனைகள் மற்றும் சட்டரீதியான புலம்பெயர்வு பற்றிய ஒருநாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

**V.** வெளிநாட்டு கப்பற்பணியாட்டொகுதியினர் தரையிறங்கும்போது செலுத்தப்பட வேண்டிய 1000/- ரூபா கட்டணமானது வங்கிகள் மூலம் செலுத்தப்படுவதற்குப் பதிலாக குறியீட்டு ஸ்ரிக்கர் விநியோகிக்கப்படுதல் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

**வருகை தருதல் மற்றும் வெளியேறல் பற்றிய தகவல்கள், இறங்குதுறைகளுக்கு ஏற்ப 2012**

| | **இறங்குதுறை** | **வருகை தந்தவர்களின் எண்ணிக்கை** | **வெளியேறியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் | 2493898 | 2546095 |
| 2 | இரத்மலான விமான நிலையம் | 25 | 14 |
| 3 | கொழும்புத் துறைமுகம் | 7625 | 7930 |
| 4 | காலித் துறைமுகம் | 18895 | 17290 |
| 5 | திருகோணமலைத் துறைமுகம் | 719 | 497 |
| 6 | அம்பாந்தோட்டைத் துறைமுகம் | 34 | 6 |
| 7 | நொரொச்சோலை இறங்குதுறை | 22 | 39 |
| | **மொத்தம்** | **2521218** | **2571871** |

**வருகை தருதல் மற்றும் வெளியேறல் பற்றிய பொதுத் தகவல்கள்**

| | | வருகை தந்த வர்கள் | **வெளியேறிய வர்கள்** | மொத் தம் |
|---|---|---|---|---|
| 1. | இலங்கைப் பிரஜைகள் | 1210914 | 1268792 | 2479706 |
| 2. | வெளிநாட்ட வர்கள் | 1310304 | 1303079 | 2613383 |
| | **மொத்தம்** | **2521218** | **2571871** | **5093089** |

# இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை கண்டங்களுக்கேற்ப வைப்படுத்தல் -2012

| இலங்கைக்கு வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கை - கண்டங்களுக்கேற்ப | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | ஆபிரிக்கா | அன்டாகரிக் | ஆசியா | அவுஸ்திரேலியா | ஐரொப்பா | வட அமைரிக்கா | தென் அமைரிக்கா | இனங்காணப்படாத | மொத்தம் |
| ஜனவரி | 726 | 0 | 146417 | 5238 | 58566 | 6944 | 169 | 113 | 122948 |
| பெப்ருவரி | 798 | 0 | 131787 | 3798 | 61271 | 5397 | 133 | 79 | 115273 |
| மார்ச் | 938 | 0 | 153520 | 4292 | 57609 | 5956 | 184 | 114 | 121931 |
| ஏப்ரல் | 774 | 0 | 162383 | 4815 | 37500 | 5051 | 133 | 113 | 93490 |
| மே | 659 | 0 | 148572 | 3286 | 22365 | 5148 | 122 | 92 | 87623 |
| யூன் | 802 | 1 | 159651 | 4829 | 25929 | 7837 | 143 | 101 | 99421 |
| யூலை | 903 | 0 | 158120 | 5410 | 51765 | 8168 | 116 | 85 | 118713 |
| ஆகஸ்ட் | 943 | 0 | 159256 | 4756 | 42416 | 6014 | 166 | 71 | 105170 |
| செப்டெம்பர் | 1388 | 0 | 148213 | 5235 | 32520 | 4105 | 130 | 109 | 92873 |
| அக்டோபர் | 1294 | 0 | 150899 | 4337 | 38714 | 5187 | 200 | 144 | 105862 |
| நவம்பர் | 905 | 0 | 144609 | 5339 | 40754 | 4998 | 174 | 76 | 104251 |
| டிசெம்பர் | 1211 | 0 | 178861 | 12760 | 57064 | 9145 | 227 | 76 | 142749 |
| **மோத்தம்** | 11341 | 1 | 1842288 | 64095 | 526473 | 73950 | 1897 | 1173 | 1310304 |
| | | | | | | | | | |

| மாதம் | வருகைதந்த பயணிகள் | | | வெளிறேிய பயணிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் | மொத்தம் | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் | மொத்தம் |
| ஜனவரி | 95225 | 122948 | 218173 | 105801 | 142076 | 247877 |
| பெப்ருவரி | 87990 | 115273 | 203263 | 107896 | 115348 | 223244 |
| மார்ச் | 100682 | 121931 | 222613 | 100513 | 122243 | 222756 |
| ஏப்ரல் | 117279 | 93490 | 210769 | 112149 | 109273 | 221422 |
| மே | 92621 | 87623 | 180244 | 96450 | 87496 | 183946 |
| யூன் | 99872 | 99421 | 199293 | 94774 | 88683 | 183457 |
| யூலை | 105854 | 118713 | 224567 | 98867 | 104056 | 202923 |
| ஆகஸ்ட் | 108452 | 105170 | 213622 | 128022 | 122341 | 250363 |
| செப்டெம்பர் | 98827 | 92873 | 191700 | 116859 | 93734 | 210593 |
| அக்டோபர் | 94913 | 105862 | 200775 | 104703 | 105460 | 210163 |
| நவம்பர் | 92604 | 104251 | 196855 | 94871 | 101540 | 196411 |
| டிசெம்பர் | 116595 | 142749 | 259344 | 107887 | 110829 | 218716 |
| **மொத்தம்** | **1210914** | **1310304** | **2521218** | **1268792** | **1303079** | **2571871** |

## 4.2 புலனாய்வு நடவடிக்கைகள்/விசேட புலனாய்வு மற்றும் உளவு ஒழுங்கமைத்தல் நடவடிக்கைகள்

நாட்டுக்குப் பாதகமான நபர்களின் வருகையை தடுத்தல், முறையற்ற வகையில் வீசா ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக நாட்டில் தங்கி நிற்கும் வெளிநாட்டவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொண்டு அவர்களைக் கைது செய்து நாடுகடத்துவதற்கான புலனாய்வு நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் இப்பிரிவின் மூலம் இடம்பெறுகின்றது. 2012 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 499 என்பதோடு இதில் பெரும்பாலோர் இந்திய, பாக்கிஸ்தான், ஆப்கனிஸ்தான்,நைஜீரியா மற்றும் சீன இனத்தவர்களாவார்கள்.

**2012 ஆம் ஆண்டில் புலனாய்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம்.**

| | கைது செய்யப்பட்ட எண்ணிக்கை | காலம் கடந்த வீசா | வீசா துர்பாவனை | நாட்டிலிருந்து வெளியேற்றம் | நாட்டிலிருந்து வெளியேற அனுமதியளிக்கப்பட்ட | விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | 511 | 23 | 488 | 499 | 04 | 08 |

- **தடுப்பு முகாம்கள்**

மிரிஹான தடுப்பு முகாமின் திருத்த நடவடிக்கைகள் 2012.07.18 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது. ஆண், பெண் தடுப்புக் கைதிகளுக்காக வெவ்வேறாக வசதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு அவர்களதுபொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக 02 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. தடுப்புக் கைதிகளின் பயணத்தின் முடிவுவரை விமானக் கடவுச் சீட்டுகளைத் துரிதமாகப் பெற்று அவர்களை திருப்பி அனுப்பும் வேலைத்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

## 2012 ஆம் ஆண்டில் தடுப்பு முகாமில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை

| | |
|---|---|
| அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்ட எண்ணிக்கை | 04 |
| சிறைச்சாலை அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்ட எண்ணிக்கை | 194 |
| பொலிஸ் உத்தியோகத்தர்களால் ஒப்படைக்கப்பட்ட எண்ணிக்கை | 11 |
| **மொத்தம்** | **209** |

**<u>2012 ஆம் ஆண்டில் தடுப்பு முகாமில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை (இனவாரியாக).</u>**

| தொடர் இலக்கம் | இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | இந்தியர்கள் | 35 |
| 02 | ஆப்கனிஸ்தானியர் | 08 |
| 03 | பாக்கிஸ்தானியர் | 01 |
| 04 | சீனர் | 29 |
| 05 | அமெரிக்கர் | 02 |
| 06 | சோமாலியர் | 04 |
| 07 | ஈரானியர் | 03 |
| 08 | வங்காளிகள் | 01 |
| 09 | துர்கியர் | 02 |
| 10 | மாலைதீவினர் | 02 |
| 11 | ஜேர்மேன் | 02 |
| 12 | பிரித்தானியர் | 02 |
| 13 | நைஜீரியர் | 12 |
| 14 | எரித்திரினியர் | 01 |
| 15 | சிறியன் | 05 |
| 16 | இந்துனீசியா | 01 |
| 17 | சுவீடன் | 01 |
| 18 | லைபேரியன் | 01 |
| 19 | தாய்வான் | 96 |
| 20 | கினியா | 01 |
| | **மொத்தம்** | **209** |

| | |
|---|---|
| 2012.12.31 ஆம் திகதியில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை | 20 |

- **அகதி வேற்பாளர் (UN.H.C.R) அந்தஸ்து**

2006 ஆம் ஆண்டு யூன் 01 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் அகதிகள் பற்றிய ஆணையாளர் அலுவலகத்துடன் இலங்கை கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் படி மூன்றாம் நாடொன்றில் அகதி அந்தஸ்தினை எதிர்பார்க்கும் நபர்களுக்கு இலங்கைக்கு வருகை தந்து அங்கிருந்து பிறிதொரு நாட்டில் அகதி அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்டு இலங்கையிலிருந்து வெளியேறும் வரை தங்கிநிற்பதற்கு அவகாசமளிக்கப்பட்டுள்ளது. இந்த முறையின் கீழ் 2012.12.31 ஆம் திகதியில் இலங்கையில் தங்கிநின்ற அகதிகள் மற்றும் அகதி அந்தஸ்து கோரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 399 ஆகும். இவர்களுள் பெரும்பாலானோர் பாகிஸ்தான் இனத்தவர்களாவர். இதற்கு மேலதிகமாக மாலைதீவு இனத்தவர்களும் ஆப்கனிஸ்தான் இனத்தவர்களும் அகதி அந்தஸ்தினைக் கோரியுள்ளார்கள்.

## 4.3 <u>சர்வதேச ஒத்துழைப்புப் பிரிவுக்கான நடவடிக்கைகள்</u>

பின்வரும் விடயங்களுக்காக 05 புதிய அலகுகளை தாபித்ததன் மூலம் உள்ளூர் நிருவாகத்தை முறைசார்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

### I. புலம்பெயர்வோர் பற்றிய உளவுப் பிரிவு.

புலம்பெயர்வோர் பற்றிய தரவுகளை ஒன்றுதிரட்டுவதற்காகவும் அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காகவும் மற்றும் இந்த திணைக்கத்திலுள்ள ஏனைய பிரிவுகளின் தரவுகளை ஒன்றுதிரட்டுவதற்காகவும் எதிர்காலத்திற்குப் பொருத்தமான வகையில் பயன்படுத்துவதன் பொருட்டு அத்தகவல்களை பகுப்பாய்வு செய்வதற்காகவும் புலம்பெயர் தகவல் மையமொன்று (MIU) தாபிக்கப்பட்டுள்ளது.

### II. காணாமல்போன மற்றும் சிதைவடைந்த கடவுச் சீட்டுக்களுக்கான பிரிவு

காணாமல் போன அல்லது திருடப்பட்ட கடவுச்சீட்டுகள் தொடர்பாக பொலிஸ் தகவல் மையத்தினால் வழங்கப்படும் தகவல்களை முறைமையில் உள்ளடக்கி அத்தகவல்களை சர்வதேச பொலிசாருக்கு வழங்கப்படுதல் இணையத்தளமொன்றின் ஊடாக(SLTD) மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது காணாமல் போன அல்லது திருடப்பட்ட வெளிநாட்டு கடவுச் சீட்டொன்றின் மூலம் வேறொருவர் வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு சட்ட விரோத நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுப்பதும் இதன் நோக்கமாகும்.

### III. மீளப் பொறுப்பேற்கும் சந்தர்ப்ப முகாமைத்துவ அலகு.

நாடுகடத்தப்பட்ட இலங்கையர்களுக்கு அந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களால் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு இதுவரை காணப்படாத புதிய

முறையொன்று வகுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இவர்களுக்கு வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கான செயன்முறை முறைசார்படுத்தப்பட்டுள்ளதோடு அத்தகவல்கள் முறைமையில் உள்ளடக்கப்படுவதும் இடம்பெறுகின்றது.

**IV. ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவ அலகு**

திணைக்களத்தில் பதிவுசெய்து கொண்டுள்ள நிறுவனங்களுக்கு வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்கள் பற்றிய தகவல்கள் தேவைப்படும் போது அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக தனியான ஒரு அலகு (IEMS) தாபிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதரகங்கள் நேரடியான தொடர்புகளை இப்பிரிவுடன் பேணுவதோடு தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் வீசா விநியோகிப்பதற்கு முன்னர் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்கள் பற்றிய திட்பநுட்பத்தை உறுதிபடுத்திக் கொள்ளுதல் இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

**V. மீளப்பொறுப்பேற்றல் பற்றிய தேசிய இணைப்பாகக் குழு**

வெளிநாடுகளிலிருந்து நாடுகடத்தப்படுவோரை மீண்டும் வரவழைத்துக்கொள்வதற்காக தேசிய இணைப்பாகக் குழுவொன்று (NCCR) தாபிக்கப்பட்டுள்ளது. அரசியல் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் பாதுகாப்புப் பெற்றிருந்த இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் அதனுடன் தொடர்புடைய ஒப்பந்தங்களையும் கொள்கைகளையும் தயாரித்தல் மற்றும் அந்த முறையியல்களை நடைமுறைபடுத்துதல் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

05. **<u>கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல்</u>**

- **<u>தலைமையகம்</u>**

கடவுச் சீட்டுப் பிரிவானது இத்திணைக்களத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ள வருகின்ற பொதுமக்கள் அதிகமாக வருகின்ற பிரிவாகும். கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுதல், புதுப்பித்தல் மற்றும் அவற்றில் பல்வேறுபட்ட மாற்றங்களுக்காக தலைமையகத்திற்கு மேலதிகமாக பிராந்திய அலுவலகங்கள் 03 தாபிக்கப்பட்டுள்ளன. 2012.02.08 ஆம் திகதி அப்போது அநுராதபுரத்தில் அமைந்திருந்த பிராந்திய அலுவலகத்தை வவுனியாவில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான காரணம் வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு அதிக வினைத்திறன்மிகு சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தினாலேயாகும்.

மக்கள் சேவையை நாளுக்கு நாள் வினைத்திறன் மிகுந்த வகையிலும் நட்புறவாகவும் மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்குக்கேற்ப 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்காக விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டில் மாற்றமொன்றை மேற்கொள்வதற்கு 2012.09.01 ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொதுவாக கடவுச்சீட்டொன்று 10 வருட செல்லுபடிகாலத்திற்கே விநியோகிக்கப்படுகின்றது. 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்காக அவ்வாறு விநியோக்கிப்படுகின்ற கடவுச் சீட்டுக்களை சுமார் 03 அல்லது 04 வருடங்கள்கூட பயன்படுத்த முடியாதெனத் தெரிந்தது. அதற்கான காரணம் பிள்ளைகள் வளர்ந்து வருகின்ற

போது அவர்களுடைய வெளித்தோற்றம் பாரிய அளவில் மாற்றமடைவதனால் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தும் போது அவர்களுக்கு சிக்கல்கள் ஏற்படுவதாகும். எனவே 16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்காக அவர்களுடைய விருப்பத்தின் படி செல்லுபடியான காலம் 03 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்ட கடவுச் சீட்டொன்று குறைந்த கட்டணத்திற்கு விநியோகிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் தேவைக்கேற்ப 10 வருட செல்லுபடி காலத்திற்காக கடவுச்சீட்டு விநியோகிப்பதற்கும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றம் மேற்கொள்ளப்பட்ட முறையானது பொதுமக்களுக்கு பயனளித்துள்ளதென்பது 2012 அக்டோபர் தொடக்கம் கடந்த 03 மாத காலப்பகுதியில் 03 வருட செல்லுபடி காலத்திற்காக கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்ட எண்ணிக்கையை ஆராயும்போது காணக்கூடியதாகவுள்ளது. கடந்த 90 நாட்களிலான காலப்பகுதியில் செல்லுபடி காலம் மூன்று வருடங்களுகாக சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டுகள் 8995 உம் விசேட நாடுகளுக்காக 2496 உம் வியோகிகப்பட்டுள்ளன.

இலங்கை கடவுச் சீட்டினை புதிய தொழில்நுட்பத்துடன் ஒப்பிட்டு உயிர்த் தரவியல் கடவுச்சீட்டொன்றை விநியோகிப்பதற்கான கருத்து திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விதப்புரையைப் பெற்று வெளிநாட்டு வள திணைக்களத்தினது தலையீட்டின் பேரில் அவுஸ்திரேலிய அரச உதவியின் மூலம் எதிர்காலத்தில் நடைமுறைபடுத்தப்படவுள்ளது. இதற்குரியதாக முறை பற்றிய கற்கையொன்றை மேற்கொண்டு உரிய முறையைத் தீர்மானிப்பது தற்போது முடிவடைந்துள்ளது. இதன்படி 2014 ஆம் ஆண்டு நடுப்பகுதில் உயிர்த் தரவியல் கடவுச் சீட்டொன்றை விநியோகிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல் 2012

| | கடவுச்சீட்டு வகை | விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியான கடவுச் சீட்டுகள் | 302849 |
| 2. | மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்லுபடியான கடவுச் சீட்டுகள் | 230857 |
| 3. | இராஜதந்திர ரீதியான கடவுச்சீட்டுகள் | 287 |
| 4. | அவசரச் சான்றிதழ் | 35826 |
| 5. | அடையாளச் சான்றிதழ்கள் | 5 |
| 6. | கடமை ரீதியான கடவுச் | 901 |

| | | |
|---|---|---|
| | சீட்டுகள் | |
| | **மொத்தம்** | **570725** |

**இலங்கை கடவுச்சீட்டுக்களைப் புதுப்பித்தல் மற்றும் திருத்துதல் 2012**

| **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| **புதுப்பித்தல் மற்றும் திருத்துதல்** | 127057 |

5.1 **<u>வெளிநாட்டு தூதுக் குழு பிரிவு</u>**

வெளிநாட்டு தூதுக் குழுக்களால் வெளிநாட்டில் வாழ்கின்ற இலங்கையர்களின் கடவுச் சீட்டு விண்ணபப்பபடிவங்கள் எனது அலுவலகத்தின் வெளிநாட்டுத் தூதுக் குழு பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. அதன்படி 2012 ஆம் ஆண்டில் சேவை பெறுனர்கள் 36691 சார்பாக சேவையாற்ற வாய்ப்புக்கிடைத்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினது 2011.12.22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி இந்தியாவின் தமிழ் நாட்டில் வாழ்கின்ற இலங்கை அகதிகள் சுமார் 90,000 பேரை இலங்கைக்கு வரவழைத்துக்கொள்ளும் போது கட்டண அறவீடின்றி கடவுச் சீட்டுகள் விநியோகிப்பதற்கு அனுமதி கிடைத்ததோடு அதன்படி தமிழ் நாட்டில் அகதி முகாம்களிலும் தம்மால் தேடிக்கொள்ளப்பட்ட தனியார் வாழ்விடங்களிலும் வாழ்கின்ற இலங்கை அகதிகளுக்கு சென்னையில் உள்ள இலங்கைக்கான பிரதி உயரிஸ்தானிகரின் விதப்புரையின் மீது எதுவித கட்டணமும் அறவிடாது இலங்கைக்கு வருகை தருவதற்கு மட்டும் 1024 கடவுச் சீட்டுகள் 2012 இல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**<u>பிராந்திய அலுவலகங்கள்</u>**

அநுராதபுரத்தில் அமைந்திருந்த பிராந்திய அலுவலகம் 2012 ஆம் ஆண்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் கண்டி பிராந்திய அலுவலகத்தினால் 51545 கடவுச் சீட்டுகளும், மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் 33893 கடவுச்சீட்டுகளும், வவுனியா அலுவலகத்தினால் 23712 கடவுச் சீட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- **கடவுச் சீட்டு புதுப்பித்தல் பிரிவு**

கடவுச் சீட்டுகளில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக குறைவடைந்து வருவது காணக்கூடியதாகவுள்ளது. இதற்கான காரணம் யாதெனில், விசேட நாடுகளுக்கான கடவுச் சீட்டுக்கள் அனைத்து நாடுகளுக்காகவும்

திருத்தப்படுதல் 2012ஆண்டு தொடக்கம் இடைநிறுத்துதல் மற்றும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 10 வருடங்களுக்காக செல்லுபடியாகும் கடவுச் சீட்டுகள் விநியோகிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

06. <u>பிரஜைகள் பிரிவு</u>

குடிவரவு,குடியகல்வுத் தணைக்களத்தின் பிரதான கடமைகளின் கீழ் வருகின்ற கடமைகளுக்கு மத்தியில் பிரஜைகள் பிரிவினால் ஈடேற்றப்படும் கடமைகளும் முக்கிய இடம் வகிக்கின்றன. இதன் கடமைகளுள் பிரஜாவுரிமை பற்றிய சட்டத்தின் 5(2) பிரிவின் கீழ் இலங்கைத் தாயொருவருக்கோ தந்தையொருவருக்கோ வெளிநாட்டில் பிறக்கின்ற குழந்தைகளின் பிறப்பினைப் பதிவுசெய்தல் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது.

I **வெளிநாடுகளில் இலங்கைப் பெற்றோருக்குப் பிறக்கின்ற குழந்தைகளின் பிறப்பினைப் பதிவு செய்தல் பிரஜைகள் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் கீழ்**

இதன்கீழ் 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கைத் தந்தையொருவருக்கு வெளிநாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே இலங்கையின் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்க முடிந்தது.

ஆனாலும் 2003 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் பிரஜைகள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துடன் முன்பு ஒருவகையில் சிரமத்துக்குள்ளாகியிருந்த வெளிநாட்டு ஆண்களைத் திருமணம்செய்து வெளிநாட்டில் குழந்தைகளைப் பிரசவித்த இலங்கைத் தாய்மார்களுக்கு தமது பிரஜாவுரிமையை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளை பதிவு செய்வதற்கான ஆற்றல் கிடைத்தது. இருப்பினும் இதற்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்த விண்ணப்பப்படிவமானது தந்தையினதும் தந்தை வழித் தரப்பினதும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே் பெரிதும் அடிப்படையாக அமைந்திருந்தமையால் 2003 ஆம் ஆண்டின் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துடன் தாய்வழித் தரப்பின் தகவல்களை உள்ளடக்குவதற்கு அதில் போதிய இடமிருக்கவில்லை. அதன்படி இந்த வருடம் இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு எம்மால் முடிந்தது.

குறிப்பாக 5(2) ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ்கள் குறிப்பிட்ட பிள்ளைகளின் பெற்றோருக்குக் கிடைப்பதில் சிக்கல்கள் நிலவுவதாக சில காலம் அவதானிக்கப்பட்டதால் அதனையும் இலகுபடுத்தி விண்ணப்பப்படிவத்தைத் திருத்தவதற்குத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன்பிரகாரம் தமது சான்றிதழை வரவழைத்துக்கொள்வதற்கான முறையினைத் தீர்மானிப்பதற்கு விண்ணப்பிக்கும் தரப்புக்கு இடமளிக்கப்படுவது புதிய விண்ணப்பப்படிவத்தின் தனிச்சிறப்பான பண்பாகும்.

அதன்படி இடம்பெற்ற மாற்றத்தின் காரணமாக வெளிநாடுகளில் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சான்றிதழ்களை இராஜதந்திர தபால் மூலம் அனுப்பிவைத்த முறைக்குப் பதிலாக விண்ணப்பதாரிகளின் விருப்பப்படி தமது வெளிநாட்டு முகவரிக்கோ அல்லது தமது உள்நாட்டு முகவரிக்கோ உரிய தபால் கட்டணங்களைச் செலுத்தி சான்றிதழை வரவழைத்துக்கொள்வதற்காக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலம் முழுவதிலும் வெளிநாட்டுத் தூதரகங்களில் சான்றிதழ்கள் குவிக்கப்பட்டு கிடந்ததோடு மேற்படி சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக தூதரகங்களுக்கு வருவதிலுள்ள சிரமம் மற்றும் இயலாமை காரணமாக பல சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்த பெரும்பாலான விண்ணப்பதாரிகளுக்கு இதன்மூலம் சலுகை கிடைக்கின்றது.

இதன்போது சான்றிதழை விண்ணப்பதாரிகளின் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முகவரிக்கு தபால் செய்வதற்காக 300.00 ரூபாவிலான உச்சமட்டத்திற்கு உட்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### 6.1 இரட்டை பிரஜாவுரிமை

பிரஜைகள் பிரிவில் நடைமுறைபடுத்தப்படுகின்ற ஏனைய சகல பணிகளுக்கு மத்தியில் இரட்டை பிரஜாவுரிமை வழங்கப்படுதல் பிரஜைகள் சட்டத்தின் 19 (2) மற்றும் 19(3) ஆம் பிரிவுகளின் கீழ் முக்கிய இடம்பிடிக்கின்றது. எனினும், 2011.01.28 ஆம் திகதி இரட்டை பிரஜாவுரிமை நடைமுறைபடுத்தப்படுதல் தற்காலிகமாக நிறுத்தபபட்டதனால் ஏற்கனவே கிடைக்கப்பெற்றிருந்த, பணம் செலுத்தி முடித்திருந்த சான்றிதழ்கள் வழங்கப்படுதல் மட்டும் இக்காலப்பகுதியில் இடம்பெற்றதோடு நடைமுறையிலிருந்த முறைக்குப் பதிலாக புதிய முறையொன்றை அறிமுகப்படுத்தும் அடிப்படை நடவடிக்கைகள் இந்த வருடம் இடம்பெற்றன. அதன் பிரகாரம் அமைச்சரவையானது இப்புதிய முறையை “ வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள்” என்ற பெயரில் தாபிப்பதற்கு அங்கீகாரம் அளித்தது. மேற்படி அங்கீகாரத்தின் படி இப்புதிய முறையை நடைமுறைபடுத்துவதற்கான சட்டங்களை வரைவு செய்வதற்கு சட்ட வரைஞருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரைவு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

### 6.2 <u>ஏனைய பிரிவுகளின் கீழான கடமைகள்</u>

I. 8,11.12 ஆகிய பிரிவுகளின் கீழ் சுமார் 70 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்திருந்ததோடு அவற்றுள் 35 க்கு மேற்பட்ட சான்றிதழ்களை விநியோகிக்க முடிந்தது.

II. சட்டத்தின் 13அ பிரிவின் கீழ் நடவடிக்கையெடுத்தல் இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கடந்த சில வருடங்களில் அதில் முன்னேற்றம் காணப்படவில்லை. இருப்பினும் இந்த வருடம் பிரஜைகள் சட்டத்தின் 13அ பிரிவின் கீழ் ஒரு விண்ணப்பதாரி சார்பாக இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுக்கொடுக்க முடிந்தது.

III. இதேவேளை 19(1) பிரிவின் கீழ் பிரஜாவுரிமையை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் இதற்கு முன்னர் முறையாக நடைமுறைபடுத்தப்படவில்லை. கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தின் மீது பிரஜாவுரிமையை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக துல்லியமான முறையொன்றை ஏற்படுத்தவும் முடிந்தது.

IV. மேற்படி சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் நிறைவேற்றப்படுகின்ற வேளையில் பிரஜைகள் சட்டத்தின் 5(2) பிரிவின் கீழ் தரவுத்தொகுதியில் உள்ளடக்க முடியாமலிருந்த பழைய விண்ணப்பதாரிகளின் தகவல்களை உள்ளடக்கும் வேலைத்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க முடிந்தது. வருட நடுவில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் வருடத்தின் எஞ்சிய காலம் முழுவதும் இடம்பெற்றதோடு அவற்றுள் 18,118 தரவுகளை தரவுத் தொகுதியில் உள்ளடக்க முடிந்தன.

V. 5(2) பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றிருந்த குறைபாடுகளுடனான கடிதக்கோப்புக்களை முடிவுறுத்தும் வேலைத்திட்டமொன்று இவ்வருடம் நடைமுறைபடத்தப்பட்டது. அதன்படி மேற்படி கடிதக் கோப்புக்களுக்குரிய குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக குறித்த விண்ணப்பதாரிகளின் இலங்கை முகவரிகளுக்கு சுமார் ஆயிரம் தபால் அட்டைகள்

அனுப்பப்பட்டதுடன் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து சான்றிதழ்களை பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது.

## 07. இந்திய இலங்கை பிரஜைகள் பிரிவு

இந்திய வம்சாவழி கொண்டவர்களை பதிவு செய்வதற்கான திணைக்களத்தின் கீழ் இப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. தற்பொது இப்பிரிவின் நடவடிக்கைகள் 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களின் கீழ் பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த சில வருடங்களுக்கான புள்ளிவிபரங்களைப் பார்க்கும்போது அந்த வகையில் பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள் விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைவடைந்திருப்பது தெரிகின்றது. 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களின் கீழ் பிரஜாவுரிமை உரித்தாகும் விதம் தொடர்பான புரிதலை 2007/2008 ஆம் ஆண்டுகளில் தேர்தல்கள் திணைக்களத்தினால் சகல கிராம சேவகர்களுக்கும் வழங்கப்பட்டது. அதன்பிரகாரம் இந்திய வம்சாவழியைக் கொண்டவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வது சம்பந்தமாக நிலவிய சிக்கல்கள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 2011/11 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை மூலமாகவும் இந்திய வம்சாவழி கொண்டவர்களுக்கு பிரஜாவுரிமை உரித்தாகும் விதம் பற்றிய தெளிவான ஆலோசனைகள் சகல அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. பிரஜாவுரிமை சான்றதழ்களுக்கான விண்ணப்பம் குறைவடைவதற்கு மேற்குறித்த விடயங்கள் ஓரளவுக்குத் தாக்கம் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றன. மேலும் கணிசமான அளவினர் தாம் பரம்பரை ரீதியாக இலங்கையர்களாக இருந்துகொண்டு அதனை அறியாமல் இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுவதற்கான சட்டங்களின் கீழ் பிரஜாவுரிமை சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்பதாகவும் தெரிகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நபர்கள் பரம்பரை ரீதியாக இலங்கை பிரஜைகளாக உரித்துப் பெற்றுள்ள விதத்தைத் தெளிவுபடுத்தி அறிவிப்பதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2012.12.31 ஆம் திகதியில் 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள் 43817 உம், 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள் 579 உம் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பிரஜாவுரிமை சான்றிதழ்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் பின்வரும் அட்டவனையில் தரப்பட்டுள்ளன.

# பிரஜாவுரிமைச் சான்றிதழ்களை விநியோகித்தல்.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| (1) 1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்கம் | 475 | 172 | 106 | 71 | 14 |
| (2) 2003 ஆம் ஆண்டின்35ஆம் இலக்கம் | 107 | 24 | 61 | 04 | 08 |
| (3) 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கம் | -- | 76 | 08 | 04 | 01 |
| (4) 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அறிவித்தல் கடிதங்களை விநியோகித்தல் | 88 | 57 | 23 | 13 | -- |

## 7.1 சீன வம்சாவழிகொண்டவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுதல்

2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் சீன வம்சாவழியைக் கொண்டவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுகின்றது. இச்சட்டத்தின் செல்லுபடி காலம் 2013.10.30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இச்சட்டத்தின் கீழ் 2012.12.31 ஆம் திகதியில் 89 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இதன் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரஜைகளின் எண்ணிக்கை 01 ஆகும்.

## 08 நலனோம்பல் சங்கத்தின் நடவடிக்கைகள்

திணைக்கள பணியாட்டொகுதியில் சுமார் ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட குடிவரவு,குடியகல்வு நலனோம்பல் சங்கமானது, அங்கத்தவர்களினதும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்தவர்களினதும் பொதுவாக ஒட்டுமொத்த சமூகத்தினதும் நலனோம்பலுக்காக பல்வேறுபட்ட சமய, சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைபடுத்துகின்றது. இதனூடாக உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமான ஊழியர்களை உருவாக்கி அவர்களது வினைதிறன்மிகு மற்றும் திருப்தியான சேவையின் ஊடாக பொதுமக்களுக்கு தரத்தில் உயர்ந்த சேவையைப் பெற்றுக்கொடுப்பது நோக்கமாகும்.

இதற்காக 2012 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

1. 2012.01.02 ஆம் திகதி புது வருடத்துக்கான உத்தியோகபூர்வ விழா மற்றும் திணைக்களத்தின் சகல சேவைகளும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் தலா ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பீட்டு விருதுகள் வழங்கப்படுதல். இத்துடன் இணைந்ததாக திணைக்களத்தின் சேவைகளோடு சம்பந்தப்பட்ட வெளி நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி விருதுகள் வழங்கப்பட்டன.

2. 2012.05.03 ஆம் திகதி களணிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வண.இந்துராகாரே தம்மரத்தன தேரர் அவர்களால் வெசாக் தர்ம போதனை நடத்தப்பட்டது.

3. 2012.05.12 ஆம் திகதி பொரளை உவெஸ்லி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் திணைக்கள ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் சுமார் 2500 பேரது பங்கேற்பில் வருடாந்த நற்புறவுச் சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

4. 2012.05.19 ஆம் திகதி வெகுசன ஊடக அமைச்சுடன் இணைந்து கோட்டே, அங்கம்பிட்டிய விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட கிரிக்கேற் விளையாட்டுப் போட்டியின் வெற்றியை திணைக்கள அணி சுவீகரித்துக்கொண்டது.

5. 2012 யூன் 04 ஆம் திகதி அமைந்திருந்த பொசொன் போயாவை முதலாகக் கொண்டு 2012.05.31 ஆம் திகதி கொழும்பு 10, பன்சல்வத்த, ஸ்ரீ பௌத்தாராம விகாராதிபதி சத்தம்ம கீர்த்தி ஷோபமானி உலுனுகம்வெஹெரே விமலானந்த தேரருக்கு 100,000/-ரூபா பெறுமதியான பௌத்த அறநூல்களும் நூல்களை களஞ்சியப்படுத்துவதற்காக கபட் ஒன்றும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

6. 2012.06.16 ஆம் திகதி தெமட்டகொடை புகையிரதத் திணைக்கள விளையாட்டு மைதானத்தில் பணியாட்டொகுதி அங்கத்தவர்களது பங்கேற்பில் ஆறு அங்கத்தவர் கிரிக்கேற் போட்டித் தொடர் ஒன்று நடத்தப்பட்டது. இதில் திணைக்களத்தைச் சேர்ந்த சகல துறைகளும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் அணிகள் பங்கேற்றன.

7. 2012.06.28 ஆம் திகதி நவலோகா ஆஸ்பத்திரியுடன் இணைந்து முழுமையான மருத்துவப் பரிசோதனையொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. குறிப்பாக இப்பரிசோதனைகளில் பங்கேற்றவர்களுக்கு புற்றுநோய் சம்பந்தப்பட்ட பரிசோதனைக்கு உள்ளாகும் வாய்ப்பு வழங்கப்பட்டது.
8. 2012.07.19 ஆம் திகதி சமுர்த்தி அமைச்சுடன் இணைந்து கோட்டே பண்டாரநாயக்கபுர விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட கிரிக்கேற் போட்டித் தொடரின் வெற்றியையும் திணைக்களம் சுவீகரித்துக் கொண்டது.

9. 2012.07.24 ஆம் திகதி வருடாந்த இரத்ததான நிகழ்ச்சித்திட்டம் மத்திய இரத்த வங்கியின் அனுசரணையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதன்மூலம் 93 இரத்தப் பைன்ட்களை இரத்த வங்கிக்குப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

10. 2012.07.31 ஆம் திகதி கந்துபொட தியான நிலையம், சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட வெளிநாட்டுப் பெண்களுக்கான தியான கூடங்கள் சுமார் 06 இலட்சம் ரூபா செலவில் மறுசீரமைக்கப்பட்டு மீள் ஒப்படைக்கும் விழா நடத்தப்பட்டது.

11. 2012.08.05 ஆம் திகதி தெமட்டகொடை புகையிரதத் திணைக்கள விளையாட்டு மைதானத்தில் பணியாட்டொகுதி அங்கத்தவர்களது பங்கேற்பில் கிரிக்கேற் போட்டித் தொடர் ஒன்று நடத்தப்பட்டது. இதில் திணைக்களத்தைச் சேர்ந்த சகல துறைகளும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் அணிகள் பங்கேற்றன.

12. 2012.09.27 ஆம் திகதி ‘‘நாரதமணி’’ ஆனந்தமிகு இசைமாலைப் பொழுது கொழும்பு மியுசியஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் பாதுகாப்பு,நகர அபிவிருத்தி அமைச்சின் கௌரவ செயலாளர் திரு.கோட்டாபய ராஜபக்ஷ அவர்களது தலைமையில் மிக வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதன் மூலம் 4,647,452/- ரூபாவை சங்கத்தின் நிதியில் சேர்க்க முடிந்தது.

13. 2012.12.20 ஆம் திகதி நத்தார் பண்டிகையை முதலாகக் கொண்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்காக ‘‘பிலிந்து ஹதட்ட நத்தலக்’’ *(‘‘குழந்தை உள்ளத்திற்கு நத்தார்’’*) நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. இதன்போது பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நகழ்ச்சியில் எல்லா வருடங்களையும் போன்று நலீன் பெரேராவை உள்ளிட்ட மேரியன்ஸ் இசைக்குழு நத்தார் கரோல் பாட இணைந்திருந்தனர்.

14. 2012.12.28 ஆம் திகதி வருடாந்தம் நடத்தப்படுகின்ற பாய் இசைக்கச்சேரி(பெதுரு சாஜ்ஜய) திணைக்கள பணியாட்டொகுதியினதும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் பங்கேற்பில் நடத்தப்பட்டது.

15. 2012.12.31 ஆம் திகதி 2012 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களுக்காக சங்கம் சார்பாக நடத்தபபடும் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் _01

கருத்திட்டம் 1 & 2 பொது நிருவாகம் மற்றும் குடிவரவுக் கட்டுப்பாடு மற்றும் குடியுரிமை

| செலவு வகை | மொத்த மதிப்பீடு | உண்மையான செலவு | சேமிப்புக்கள் | செயலாற்றுகை % |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | | | | |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 32,75,00,000 | 32,37,71,802 | 37,28,198 | **99** |
| பிரயானச் செலவுகள் | 1,88,00,000 | 1,81,32,476 | 6,67,524 | **96** |
| வழங்கல்கள் | 2,24,50,000 | 2,16,03,833 | 8,46,167 | **96** |
| பராமரிப்புச் செலவு | 8,99,50,000 | 8,74,79,184 | 24,70,816 | **97** |
| ஒப்பந்தம் சார்ந்த சேவைகள் | 14,27,10,000 | 14,10,39,368 | 16,70,632 | **99** |
| பிற மீண்டெழும் செலவுகள் | 66,40,000 | 66,28,877 | 11,123 | **99** |
| **மொத்தம்** | **60,80,50,000** | **59,86,55,540** | **93,94,460** | |
| **மூலதனச் செலவு** | | | | |
| **புனர்வாழ்வு மற்றும் மூலதன சொத்துக்களின் மேம்பாடு** | **1,54,20,000** | **1,44,44,035** | **9,75,965** | |
| **2001** கட்டடம் மற்றும் கட்டமைப்புக்கள் | 42,00,000 | 32,59,731 | 9,40,269 | **78** |
| **2002** கருவித்தொகுதி,இயந்திர சாதனங்கள் | 1,01,20,000 | 1,01,13,315 | 6,685 | **99** |
| **2003** வாகனங்கள் | 11,00,000 | 10,70,989 | 29,011 | **97** |
| **மூலதனச்சொத்துக்களின் கைப்பற்றல்** | **7,06,30,000** | **7,00,37,986** | **5,92,014** | |
| **2101** வாகனங்கள் | 6,00,000 | 5,20,000 | 80,000 | **87** |
| **2102** தளபாடங்களும் அலுவலக உபகரனங்களும் | 25,00,000 | 20,75,064 | 4,24,936 | **83** |
| **2103** இயந்திர சாதனங்கள் | 1,81,30,000 | 1,81,29,257 | 743 | **99** |
| **2401** அறிவு விருத்தியும் பயிற்சியும் | 9,00,000 | 7,48,045 | 1,51,955 | **83** |
| **2502** ஏனைய முதலீடுகள் | 4,94,00,000 | 4,93,13,665 | 86,335 | **99** |
| **மொத்தம்** | **8,69,50,000** | **8,52,30,066** | **17,19,934** | |
| **மொத்த மூலதனம் மற்றும் மீண்டெழுகை** | **69,50,00,000** | **68,38,85,606** | **1,11,14,394** | |


அரச ஊழியர் முற்பணம் "பீ" கணக்கு 2012 -செயலாற்றுகை

| | |
|---|---|
| 2012 செலவுக்கான ஆகக் கூடிய எல்லை | 2,35,50,000 |
| 2012 வருடத்தில் கடன் செலுத்தலகள் | 2,24,05,998 |
| 2012 கடன் நிலுவையின் ஆகக் குறைந்த எல்லைகள் | 1,80,00,000 |
| 2012வருடத்தினுள் கடன் அறவீடுகள் | 2,58,15,251 |


வருமானம் ஒன்றுதிரட்டப்படுதல் - கடவுச்சீட்டுகள்,வீசா,இரட்டை பிரஜாவுரிமை மற்றும் ஏனைய.

| | 2011 | 2012 |
|---|---|---|
| ஜனவரி | 30,30,04,038 | 42,34,73,825 |
| பெப்ருவரி | 21,48,39,689 | 53,66,25,862 |
| மார்ச் | 31,94,06,253 | 54,36,07,555 |
| ஏப்ரல் | 24,39,85,698 | 40,56,58,563 |
| மே | 34,81,13,955 | 49,48,21,446 |
| யூன் | 30,64,71,158 | 45,71,36,202 |
| யூலை | 31,67,02,508 | 59,87,87,277 |
| ஆகஸ்ட் | 30,21,45,826 | 59,44,24,541 |
| செப்டெம்பர் | 31,90,68,875 | 50,78,41,606 |
| அக்டோபர் | 32,07,14,437 | 51,23,54,518 |
| நவம்பர் | 29,49,51,816 | 53,16,31,068 |
| டிசெம்பர் | 47,52,53,494 | 57,48,89,140 |
| **மொத்தம்** | **3,76,46,57,745** | **6,18,12,51,604** |

,இணைப்பு 03


வருமானம் ஒன்றுதிரட்டப்படுதல், - கடவுச் சீட்டு, வீசா, இரட்டை பிரஜாவுரிமை மற்றும் ஏனைய.
70,00,00,000
60,00,00,000
50,00,00,000
40,00,00,000
30,00,00,000
20,00,00,000
10,00,00,000
-
வருமானம்(Rs.)
[dtup
ngg;Utup
khu;r;
Vg;uy;
Nk
A+d;
A+iy
Mf];l;
nrg;nlk;gu;
mf;Nlhgu;
etk;gu;
bnrk;gu;
மாதம்
2011
2012

,இணைப்பு 04




| கடவுச்சீட்டு | துறைமுகம் | வீசா | வீசா ஈரீஏ | சீஜரீ |
|---|---|---|---|---|
| 3,16,17,52,072 | 4,92,19,000 | 69,68,96,744 | 2,10,42,01,938 | 16,91,81,850 |

,இணைப்பு 05

வருமானச் சுரக்கம் 2012

குடிவரவு, குடியகழ்வுத் திணைக்களம்.

| மாதம் | கடவுச் சீட்டு வருமானம் 1 | பி.செ.வருமானம் 2 | வெளிநாட்டு தூதுக்குழு 3 | முழு மொத்தம் 4 | துறைமுகம் 5 | வீசா 6 | இலத்திரனியல் சுற்றுலா அங்கீகாரம் | இரட்டை பிரஜாவுரிமை 7 | மொத்த வருமானம் 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 18,49,76,276.60 | 47,65,712.92 | | 18,97,41,989.52 | 35,97,000.00 | 5,34,77,045.00 | 13,67,94,790.12 | 3,98,63,000.00 | 42,34,73,824.64 |
| பெப்ருவரி | 16,80,23,380.66 | 45,06,300.00 | 6,63,03,955.06 | 23,88,33,635.72 | 38,03,000.00 | 4,78,52,304.50 | 21,23,41,922.26 | 3,37,95,000.00 | 53,66,25,862.48 |
| மார்ச் | 18,31,07,488.50 | 53,55,500.00 | 8,95,69,990.60 | 27,80,32,979.10 | 43,20,000.00 | 5,66,00,824.75 | 17,29,61,251.04 | 3,16,92,500.00 | 54,36,07,554.89 |
| ஏப்ரல் | 14,81,52,855.33 | 39,31,822.24 | 8,32,89,037.65 | 23,53,73,715.22 | 42,19,000.00 | 4,57,71,744.76 | 10,95,28,503.17 | 1,07,65,600.00 | 40,56,58,563.15 |
| மே | 19,43,83,942.08 | 57,36,910.00 | 8,09,08,104.32 | 28,10,28,956.40 | 40,68,000.00 | 5,47,98,010.79 | 14,56,55,478.74 | 92,71,000.00 | 49,48,21,445.93 |
| யூன் | 18,07,24,268.26 | 53,07,000.00 | 6,75,71,678.93 | 25,36,02,947.19 | 42,25,000.00 | 5,69,83,047.00 | 12,53,86,707.82 | 1,69,38,500.00 | 45,71,36,202.01 |
| யூலை | 19,78,39,965.15 | 59,71,140.00 | 8,22,49,364.78 | 28,60,60,469.93 | 40,75,000.00 | 7,36,99,883.50 | 22,86,71,924.15 | 62,80,000.00 | 59,87,87,277.58 |
| ஆகஸ்ட் | 25,12,11,222.57 | 50,92,500.00 | 10,78,36,228.46 | 36,41,39,951.03 | 36,63,000.00 | 7,63,33,872.68 | 14,21,98,467.64 | 80,89,250.00 | 59,44,24,541.35 |
| செப்டெம்பர் | 16,68,79,796.39 | 45,50,500.00 | 8,52,25,285.98 | 25,66,55,582.37 | 33,56,000.00 | 5,63,86,506.10 | 18,91,95,017.75 | 22,48,500.00 | 50,78,41,606.22 |
| அக்டோபர் | 16,47,97,876.96 | 50,06,050.00 | 6,75,72,971.63 | 23,73,76,898.59 | 41,89,000.00 | 5,80,65,675.85 | 20,78,62,943.09 | 48,60,000.00 | 51,23,54,517.53 |
| நவம்பர் | 16,87,19,501.12 | 56,25,650.00 | 10,01,85,326.76 | 27,45,30,477.88 | 55,09,000.00 | 5,98,22,144.00 | 18,89,74,446.33 | 27,95,000.00 | 53,16,31,068.21 |
| டிசெம்பர் | 15,72,24,691.00 | 43,48,600.00 | 10,48,01,178.32 | 26,63,74,469.32 | 41,95,000.00 | 5,71,05,685.10 | 24,46,30,485.86 | 25,83,500.00 | 57,48,89,140.28 |
| மொத்தம் | 2,16,60,41,264.62 | 6,01,97,685.16 | 93,55,13,122.49 | 3,16,17,52,072.27 | 4,92,19,000.00 | 69,68,96,744.03 | 2,10,42,01,937.97 | 16,91,81,850.00 | 6,18,12,51,604.27 |